(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

NFWC

தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
நான்காம் தவணைப் பரீட்சை - 2023
National Field Work Centre, Thondaimanaru.
4th Term Examination - 2023

கணக்கீடு **Accounting**	**Three Hours** **Gr -13 (2023)**	**33**	**T**	**I**

பகுதி I

01) நீர் ஒரு கணக்கீட்டு மாணவன் என்ற அடிப்படையில் பின்வரும் கூற்றுக்களில் சரியான கூற்றை தெரிவு செய்க.

A - நிதிக் கணக்கீடு அக்கறையுடைய தரப்பினர் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு தேவையான நிதிசர், நிதிசாரா தகவல்களை வழங்குகின்றது.

B - கணக்கீடானது பல்வேறுபட்ட சூழல் மாற்றங்களுக்கு ஏற்ப மாற்றமடையக் கூடியது.

C - கணக்கீட்டு அலகு என்பது கணக்கீட்டை தயாரிக்கும் தரப்பினரையும் குறிக்கும்.

D - நிதிக் கணக்கீட்டின் தகவல் பரப்பை விட முகாமைக் கணக்கீட்டின் தகவல் பரப்பானது பரந்துள்ளது.

1) A C 2) BCD 3) ACD 4) ABD 5) ABCD

02) நிதிக்கணக்கீட்டு செய்முறை தொடர்பில் சரியான தொடரை ஒழுங்குபடுத்துக.

A – பகுப்பாய்வு செய்தல்

B – பொழிப்பாக்கல்

C – பதிவு செய்தல்

D – இனம்கானலும் அளவிடலும்

E – வகைப்படுத்தல்

1) DCBED 2) CEDBA 3) DCEAB 4) CBDEA 5) DCEBA

❖ பொதிகை நிறுவனத்தின் ஏடுகளில் 1.3.2023 இல் காணப்படும் மீதிகள் வருமாறு.

	ரூபா
இருப்பு	65 000
வியாபார வருமதி	48 000
வியாபார சென்மதி	36 000
காசு	152 000
உரிமையாண்மை	?

ஆரம்பத்தில் வேறு சொத்து பொறுப்புக்கள் எதுவும் காணப்படவில்லை. மார்ச் மாத தகவல்கள் வருமாறு,

5.3 ரூ 25000 பட்டியல் விலையான பண்டங்கள் 20% வியாபார கழிவில் உரிமையாளரின் சொந்தப் பணத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்டது.

7.3 உரிமையாளர் ரூ 5000 பண்டங்களை சொந்த தேவைக்கு பற்றினார்

12.3 இத்தினத்தில் தன்னிடமுள்ள இருப்புக்களில் ½ பகுதியை கிரயத்தில் 25% இலாப எல்லையில் கடனுக்கு விற்பனை செய்தது.

18.3 உட்திரும்பல் ரூ 5000 (இவை 12.3 இல் இடம்பெற்ற விற்பனை)

25.3 ஆரம்ப கடன்பட்டோர் மீதியில் 1/3 10 % கழிவு தள்ளி பெறப்பட்டது.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

❖ **3ம் 4ம் 5ம் வினாக்களுக்கு விடை தருக.**

03) 31.3.2023 இல் காணப்படும் சொத்து பொறுப்பு உரிமையாண்மை யாது?

	சொத்து =	பொறுப்பு +	உரிமையாண்மை
	ரூபா	ரூபா	ரூபா
1.	287400	56000	231400
2.	267400	36000	231400
3.	287400	36000	251400
4.	286400	36000	250400
5.	282400	48000	234400

04) 31.3.2023 இல் இருப்பு கணக்கு மீதியும் 2023 மார் மாத இலாபமும் யாது?

	இருப்பு	இலாபம்
	ரூபா	ரூபா
1.	44000	6400
2.	39000	7400
3.	44000	6400
4.	44000	7400
5.	38000	6400

05) 2023 மார் மாத கொடுக்கல் வாங்கல்களை பிரதிபலிக்கு மூல ஆவணங்களை வரிசைப்படுத்துக.

1. பற்றுச்சிட்டு, நாட்குறிப்பு உறுதிச் சீட்டு, பட்டியல், வரவுத்தாள், நாட்குறிப்பு உறுதிச்சீட்டு
2. நாட்குறிப்பு உறுதிச் சீட்டு, நாட்குறிப்பு உறுதிச் சீட்டு, பட்டியல், செலவுத்தாள், பற்றுசீட்டு
3. பற்றுச்சிட்டு, நாட்குறிப்பு உறுதிச் சீட்டு, பட்டியல், செலவுத்தாள், நாட்குறிப்பு உறுதிச்சீட்டு
4. கைச்சாத்து, நாட்குறிப்பு உறுதிச் சீட்டு, பட்டியல், வரவுத்தாள், பற்றுச்சீட்டு
5. கைச்சாத்து நாட்குறிப்பு உறுதிச் சீட்டு, பட்டியல், செலவுத்தாள், நாட்குறிப்பு உறுதிச்சீட்டு

❖ *பரதன் நிறுவனத்தின் 2023 மார்ச் 01 இல் காசுக்கட்டுப்பாட்டு கணக்கு மீதி ரூ 75 000 வங்கிக்கூற்று மீதி ரூ 70 000 இம் மீதிகளின் வேறுபாட்டிற்கு சென்றமாத மாற்றப்படாத, வசூழிக்கப்படாத காசோலைகள் காரணமாகும் இவை அனைத்தும் இம்மாதம் வங்கியில் மாற்றப்பட்டு வசூழிக்கப்பட்டன.*

2023 மார்ச் மாதத்திற்கான காசுப் பெறுவனவு நாளேடுகளின் மொத்தம் ரூ 145 000 மொத்த காசுப் கொடுப்பனளின் மொத்தம் ரூ 85 000

மார்ச் மாத கிடைக்கப்பெற்ற வங்கிக் கூற்றிலிருந்து பெறப்பட்ட தகவல்கள்:

-கைத்தேறிய காசோலை (சென்றமாத வசூழிக்கப்படாத காசோலை உட்பட)	ரூ 128000
-பணமாக்கப்பட்ட காசோலைகள் (சென்றமாத மாற்றப்படாத காசோலை ரூ 13000 உட்பட)	ரூ 83000
-நேரடியாக கிடைக்கப்பெற்ற பங்குலாபம்	ரூ 8000
-நிலையியற்கட்டளை காப்புறுதி	ரூ 4000

❖ **6ம் 7ம் வினாக்களுக்கு விடை தருக.**

06) மார்ச் மாத திருத்திய காசுக்கட்டுப்பாட்டு கணக்கு மீதி யாது?

1. ரூ 135000 2. ரூ 139000 3. ரூ 79000 4. ரூ 142000 5. ரூ 131000

07) மார்ச் மாத வங்கிக்கூற்று மீதி யாது?

1. ரூ 135000 2. ரூ 139000 3. ரூ 150000 4. ரூ 119000 5. ரூ 124000

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

❖ பாரி நிறுவனத்தின் 31.3.2023 இல் முடிவடைந்த மாதத்திற்கான கடன்பட்டோன் பேரேட்டுப்பட்டியல் மீதிகளின் கூட்டுத்தொகை ரூ 53000 கட்டுப்பாட்டு கணக்கு மீதி உடன்படவில்லை காரணங்கள் வருமாறு.

அ) மதனால் உட்திருப்பப்பட்ட ரூ 8000 உட்திரும்பல் நாளேட்டில் பதியப்படவில்லை.

ஆ) கடன்பட்டோன் கட்டுப்பாட்டு கணக்கின் செலவுப் பக்கம் ரூ 5000 ஆல் கூட்டிக்கூட்டப்பட்டது.

இ) விற்பனை நாளேடு ரூ 3000 ஆல் கூட்டிக்கூட்டப்பட்டது.

ஈ) கடன்பட்டோன் மீது விதித்த வட்டி ரூ 2000 கடன்பட்டோன் கட்டுப்பாட்டு கணக்கிலும் விதித்த வட்டிக் கணக்கிலும் செலவிடப்பட்டது.

❖ **8ம் 9ம் வினாக்களுக்கு விடை தருக.**

08) 31.3.2023 இல் முடிவடைந்த மாதத்திற்கான திருத்திய கடன்பட்டோன் கட்டுப்பாட்டு கணக்கும் திருத்தமுன் கடன்பட்டோன் கட்டுப்பாட்டு கணக்கும்.

	திருத்திய கட்டுப்பாட்டு கணக்கு	திருத்தமுன் கட்டுப்பாட்டு கணக்கு
	ரூபா	ரூபா
1)	45000	47000
2)	45000	49000
3)	61000	63000
4)	61000	65000
5)	53000	55000

09) மேற்படி பிழை தவறுகளால் தொங்கல் கணக்கு மீதியும் இலாபத்தில் ஏற்பட்ட தாக்கமும்

	தொங்கல் கணக்கு	இலாபத்தில் ஏற்பட்ட தாக்கம்
	ரூபா	ரூபா
1)	1000 வரவு	11000 அதிகரிக்கும்
2)	9000 செலவு	5000 அதிகரிக்கும்
3)	9000 வரவு	11000 அதிகரிக்கும்
4)	9000 வரவு	11000 குறையும்
5)	1000 வரவு	5000 குறையும்

10) நடைமுயைல்லாச் சொத்துக்களுக்கு வருடாந்தம் ஒரே முறையில் பெறுமானத்தேய்விடுதற்கு அடிப்படையா அமையும் கணக்கீட்டு எண்ணக்கருவும் கணக்கீட்டின் பண்புத் தரமும் எது?

	கணக்கீட்டு எண்ணக்கரு	கணக்கீட்டு பண்புத்தரம்
1)	வரலாற்றுக்கிரய	பொருத்தப்பாட்டு தன்மை
2)	கொள்கை மாறாமை	உண்மைப் பிரதிநிதித்துவம்
3)	இணைதல்	ஒப்பீட்டுத் தன்மை
4)	தோடர்ந்தியங்கும்	காலந்தவறாமை
5)	கொள்கை மாறாமை	ஒப்பீட்டுத்தன்மை

11) இணைதல் எண்ணக்கருவுக்கு அடிப்படையாக அமையும் பின்வம் கணக்கீட்டு நடைமுறைகளில் சரியான நடைமுறையை தெரிவு செய்க.

A – பெறுமானத்தேய்வு வருமானக்கூற்றில் செலவாக இனம்காணல்

B – இறுதி இருப்பை வருமானக்கூற்றில் விற்கத்தயாரான பொருளின் கிரயத்தில் கழித்துக்காட்டல்.

C – கடன்பட்டோரையும் கடன்கொடுநரையும் நிதி நிலைமைக்கூற்றில் சொத்தாகவும் பொறுப்பாக காட்டல்.

1) A மட்டும் 2) BC 3) AB 4) AC 5) ABC

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

12) ஒரு பங்குடைமையில் சிவனும், யேசுவும் இலாபநட்டங்களை 3:2 என பகிரும் பங்காளர்கள் 1.4.2022 இல் புத்தன் புதிய பங்காளராக அனுமதிக்கப்பட்டார். புதிய இலாபநட்ட விகிதம் 5:3:2 நன்மதிப்பு தொடர்பான சீராக்கம் பங்காளர் மூலதனக் கணக்கின் ஊடாக சீராக்கப்பட்டது. வருட ஆரம்பத்திலும், இறுதியிலும் உள்ள மூலதன மீதிகள் வருமாறு.

	சிவன் ரூபா	யேசு ரூபா	புத்தன் ரூபா
1.4.2022 மீதி	200 000	150 000	-
31.3.2023 மீதி	215 000	165 000	170 000

பின்வரும் கூற்றுக்களில் சரியான கூற்றை தெரிவு செய்க.

A – நிறுவன மொத்த நன்மதிப்பு ரூ 100 000

B – புத்தன் மூலதனப் பங்களிப்பு ரூ 200 000

C – புத்தனது நன்மதிப்பு பங்கு ரூ 20 000

D – பங்காளர் சேரலினால் பங்குடைமையின் உரிமையாண்மை ரூ 200 000 ஆல் அதிகரித்தது.

1) ABC 2) BC 3) ABD 4) BD 5) ABCD

❖ ஒரு பங்குடைமையில் ராமு, சோமு, கோபு என்போர் இலாபநட்டங்களை முறையே 2:1:1 என பகிரும் பங்காளர்கள் பங்காளர் மூலதனத்திற்கு ஆண்டுக்கு 10% வட்டியும் பங்காளர் ஒவ்வொருவருக்கும் மாதாந்தச் சம்பளமாக முறையே ரூ 50 000 வழங்கப்படல் வேண்டும்.
1.4.2022 இல் ராமு இளைப்பாறினார் சோமுவும், கோபுவும் இலாபநட்டங்களை சமனாக பகிர்ந்து கொண்டு பங்குடைமையை தொடர்ந்தனர். நன்மதிப்பு மூலதனக் கணக்கினூடாக சீராக்கப்பட்டது. சோமு, கோபு முறையே ஆண்டுகாலத்தில் ரூ 90 000, 40 000 தொகையை காசாக பற்றினார். ராமுவின் நன்மதிப்பு ரூ 200 000 ராமுவுக்கு செலுத்தவேண்டிய தொகை 10% கடன் கணக்கிற்கு மாற்றப்பட்டது. ஏனைய ஒப்பந்தங்கள் மாற்றமின்றி தொடர்ந்தன. பங்காளர் மூலதன நடைமுறைக் கணக்கு மீதிகள் வருமாறு.

	ராமு ரூபா 000	சோமு ரூபா 000	கோபு ரூபா 000
01.4.2022 மூலதனம் கணக்கு	8000	4000	3000
01.4.2022 நடைமுறை கணக்கு	200	100	50
31.3.2023 நடைமுறை கணக்கு	-	1100	1000

❖ ***13ம் 14ம் 15ம் வினாக்களுக்கு விடை தருக.***

13) 31.3.2023 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பங்குடைமையின் இலாபம் யாது?
1) ரூ 1280 000 2) ரூ 2180 000 3) ரூ 2080 000 4) ரூ 2280 000 5) ரூ 1980 000

14) ராமுவின் கடன் தொகை யாது ?
1) ரூ 8400 000 2) ரூ 8200 000 3) ரூ 8300 000 4) ரூ 8100 000 5) ரூ 8000 000

15) 31.3.2023 இல் பங்குடைமையின் உரிமையாண்மை யாது?
1) ரூ 8800 2) ரூ 8900 000 3) ரூ 17300 000 4) ரூ 8300 000 5) ரூ 18800 000

16) வரையறுத்த சேது உற்பத்திக் கம்பனியின் 31.3.2023 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான தகவல்கள் வருமாறு.

மூலப்பொருள் கொள்வனவு	ரூ 312000
நேர்கூலி	ரூ 40000
உற்பத்தி மேந்தலை	?
மூலப்பொருள் இருப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு	ரூ 18000
குறைவேலை இருப்பில் ஏற்பட்ட குறைவு	ரூ 12000

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

31.3.2023 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான உற்பத்திக் கிரயம் ரூ 398000 இவ் உற்பத்திக் கிரயக் கணிப்பீட்டின் போது பொறின் ஆண்டுப்பெறுமானத் தேய்வு ரூ 22000 உற்பத்திக் கிரய கணிப்பீட்டில் உள்ளடக்கப்படவில்லை 31.3.2023 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான சரியான மொத்த உற்பத்தி மேந்தலை யாது?

1) ரூ 58000 2) ரூ 78000 3) ரூ 32000 4) ரூ 52000 5) ரூ 74000

❖ *உடலுறுதி விளையாட்டுக் கழகத்தில் மாதாந்தம் அங்கத்தவர் ஒருவர் ரூபா 50 சந்தாக்கட்டனமாக செலுத்தும் 200 அங்கத்தினர் 1.4.2022 இல் காணப்படுகின்றனர் .*

1/4/2022 இல் சந்தா செலுத்தாத அங்கத்தவர்கள் 15 பேர். ஆண்டு காலத்தில் 150 பேரிடம் நடப்பாண்டில் ஒரு வருட சந்தா பெறப்பட்டது. இதில் 1.10.2022 இல் புதிதாக இணைந்து கொண்ட 20 அங்கத்தவர்களும் அடங்குவர். இதை விட மேலும் 10 பேர் தமது நிலுவைச் சந்தாவை இவ்வாண்டு செலுத்தினர். இக்கழகத்திலுள்ள 20 பேர் தமது நடப்பாண்டு சந்தாவை சென்றாண்டு செலுத்தினர். ஆண்டில் அங்கத்தம் வகித்த காலப்பகுதிக்கே சந்தாவை வருமானமாக கருதுவது கழகத்தின் கொள்கை.

❖ ***17 ம் 18ம் வினாக்களுக்கு விடை தருக.***

17) 31.3.2023 உள்ள வருமதிசந்தா யாது?
1) ரூ 30 000 2) ரூ 33000 3) ரூ 36000 4) ரூ 28000 5) ரூ 32000

18) 31.3.2023 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான சந்தா வருமானமும் காசாக பெற்ற சந்தாவும் யாது?

சந்தா வருமானம் ரூபா	பெற்ற சந்தா ரூபா
132000	96000
124000	96000
120000	88000
126000	96000
132000	90000

19) இலங்கை கணக்கீட்டு எண்ணக்கரு சட்டகம் தொடர்பில் பின்வரும் கூற்றுக்களில் மிகச் சரியான கூற்றை தொரிவு செய்க.

A - இது இலங்கை கணக்கீட்டு நியமத்தின் ஒரு பிரிவாகும்

B - இது நிதிக்கூற்றுக்களின் பண்புத்தரத்தையும் நம்பகத்தன்மையையும் ஏற்படுத்துகின்றது.

C - இது நிதிக் கணக்கீட்டுடனும், முகாமைக் கணக்கீட்டுனும் தொடர்புடையது

D – கணக்கீட்டு எண்ணக்கரு சட்டகத்தின் அடிப்படை எண்ணக்கரு தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு ஆகும்.

1) A D 2) BD 3) ABD 4) ACD 5) ABCD

20) கணக்கீட்டு எண்ணக்கரு சட்டகத்தின்படி கணக்கீட்டு தகவல்களின் மேம்படுத்தும் பணப்புகளாக பின்வருவனவற்றுள் எது / எவை கருதப்படும்.

A – விளங்கிக்கொள்ளக்கூடிய தன்மை

B – ஒப்பீட்டுத் தன்மை

C – பொருத்தப்பாட்டு தன்மை

D – காலந்தவறாமை

E – உறுதிப்படுத்தக்கூடிய தன்மை

1) ABC D 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCDE

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

21) தீபக் பொதுக்கம்பனியின் 31.3.2023 இல் முடிவடைவடைந்த நிதியாண்டுக்கான நிதிக்கூற்றுகளுக்கு 25.5.2023 இல் இயக்குனர்களால் அதிகாரமளிக்கப்பட்டன 31.3.2023 இலிருந்து 25.05.2023 வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற நிகழ்வுகள் வருமாறு.

A – 31.3.2023 இல் உள்ள இருப்புக்கள் அதன் கிரயத்தைவிட குறைவான விலையில் விற்றல்.

B – 10.5.2023 இல் விபாரத்திற்கு சொந்தமான ரூ 500000 நிலத்தின் ஒரு பகுதியை அரசு ரூ 300000 விலையில் சுவீகரித்தல்.

C – 31.3.2023 இல் உள்ள பொறி 15.4.2023 இல் ஏற்பட்ட தீ விபத்தில் அழிவடைதல்.

D – 2023 ஏப்பில் மாதம் கடனுக்கு விற்கப்பட்ட கடன் வாடிக்கையாளர் ரூ 15000 21.5.2023 இல் முறிவடைந்தார்.

LKAS 10 இன்படி 31.3.2023 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் சீராக்க வேண்டிய **நிகழ்வுகள்** எவை?

1) AC மாத்திரம் 2) A மாத்திரம் 3) AD மாத்திரம் 4) ACD 5) BCD

22) வரையறுத்த சர்க்கி கம்பனியில் 31.3.2023 இல் ஆ என்ற இருப்பு தொடர்பான தகவல்கள் வருமாறு

இருப்பின் வகை	அலகு எண்	அலகு கொள்வனவு கிரயம்	மாற்றல் கிரயம்	அலகு விற்பனை விலை	நேரடி விற்பனை செலவு
அரிசி	500	60	15	80	6
பருப்பு	300	40	10	60	5
சீனி	400	38	8	49	4

இலங்கை கணக்கீட்டு நியமம் 02 அமைய 31.3.2023 இல் உருபடிரீதியாக கணிக்கப்பட்ட இருப்பின் பெறுமதி யாது?

1) ரூ 74000 2) ரூ 65 000 3) ரூ 78 000 4) ரூ 70 000 5) ரூ 68 000

❖ வரையறுத்த பரதம் பெறுமதி சேர் வரிக்கு பதிவு செய்யப்பட்ட கம்பனியின் 31.3.2023 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான தகவல்கள் வருமாறு.

- பொறியின் கொள்விலை (15% VAT உட்பட)	276 000
- பொறிக்கான இறக்குமதி தீர்வை	ரூ 30 000
- பொறி பழுதுபார்தல் செலவு	ரூ 25 000
- பொறியை எடுத்து வருவதற்கான உட்சுமை கூலி	ரூ 15 000
- பரீட்சார்த்த உற்பத்திக் கட்டனம்	ரூ 20 000
- பொறிக்கான தாபித்தல் செலவு	ரூ 35 000

பரிட்சார்த்த உற்பத்தி 100 அலகுகள் ஒவ்வொன்றும் ரூ 100 இற்கு விற்கப்பட்டது இப்பொறியின் இழிவுப்பெறுமதி ரூ 20000 பயனள்ள ஆயுட்காலம் 15 வருடம். பொறி 01.04.2022 இல் பெறப்பட்டது நிர்மானவேலைகள் 30.6.2022 நிறைவடைந்தன இத்தினத்திலிருந்து பயன்பாட்டிற்கு வருகின்றது.

❖ ***23 ம் 24 ம் 25ம் வினாக்களுக்கு விடை தருக.***

23) 31.3.2023 இனம்காணப்பட்ட பொறியின் கிரயம் முறையே யாது?

1) ரூ 325 000 2) ரூ 356 000 3) ரூ 340 000 4) ரூ 370 000 5) ரூ 320 000

24) 31.3.2023 இல் பொறியன் முன்கொண்டுவரும் தொகை யாது?

1) ரூ 306 000 2) ரூ 315 000 3) ரூ 314 500 4) ரூ 305 000 5) ரூ 300 000

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

25) பொறி சார்பான கொடுக்கல் வாங்கல்களால் கம்பனியின் 31.3.2023 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான இலாபத்தில் ஏற்பட்ட தேறிய குறைவு யாது?

1) ரூ 60 000   2) ரூ 50 000   3) ரூ 65 000   4) ரூ 55 000   5) ரூ 101 000

26) LKAS 2 பின்வரும் முடிவுப் பொருள் இருப்புக் கிரயத்தில் உள்ளடக்கப்படாத கிரயங்கள் எவை?

A - பயன்படுத்திய மூலப்பொருள் கிரயம்

B - முடிவுப்பொருள் களஞ்சியப்படுத்தம் கிரயம்

C - இருப்பழிவுகளும் விரையங்களும்

D - உற்பத்தி கூலி

E - நிர்வாக மேந்தலை

1) A, D யும்   2) A, B யும்   3) A D E யும்   4) A B C யும்   5) B C E யும்

27) வரையறுத்த சாஜி கம்பனி 1.4.2018 இல் ரூ 500 000 கிரயத்தில் பொறியொன்றை கொள்வனவு செய்தது. இதன் இழிவுப்பெறுமதி ரூ 20 000 ஆயுட்காலம் 8 வருடங்கள் 1.4.2022 இல் இப் பொறி ரூ 80000 செலவில் கருவியொன்று பொருத்தப்பட்டது இதனால் இதன் ஆயுட்காலம் அதிகரித்ததுடன் இதன் இழிவுப்பெறுமதி மேலும் ரூ 5000 ஆல் அதிகரித்து. இம் மாற்றங்களுக்கமைய 31.3.2023 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான பொறியனின் புதிய பெறுமானத் தேய்வு ரூ 45000 எனின்
மேற்படி மாற்றங்களால் பொறியின் ஆயுட்காலத்தில் ஏற்பட்ட மேலதிக அதிகரிப்பு யாது?

1) 7 ஆண்டு   2) 2 ஆண்டு   3) 3 ஆண்டு   4) 4 ஆண்டு   5) 5 ஆண்டு

❖ *வரையறுத் காயா கம்பனியின் 31.3.2023 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான தகவல்கள் வருமாறு.*

விபரம்	**ரூ 000**
விற்பனை	*5400*
மொத்தலாபம்	*1400*
நிர்வாக விநியோக செலவு	*800*
மோட்டார் விற்பனைலாபம்	*200*
செலுத்திய பங்குலாபம்	*150*
காணி மீள்மதிப்பீட்டு மிகை	*250*
பொறிமதிப்பீட்டு பற்றாக்குறை	*120*

31.3.2020 இல் பொறியானது ரூ 100 000 ஆல் கூட்டி மீள்மதிப்பிடப்பட்டிருந்தது. காணி 31.3.2023 இல் முதல்தடைவையாக கூட்டி மீளமதிப்பிடப்பிடப்பட்டது.

28 ஆம் 29 ஆம் 30 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

28) இலங்கை கணக்கீட்டு நியமத்தினபடி 31.3.2023 இல் முடிவடைந்த வருடத்திற்கான மொத்தவருமானம், மொத்தச்செலவு எவை?

மொத்தவருமானம் 000	**மொத்தச்செலவு 000**
7250	*4920*
7250	*5070*
5850	*5070*
5850	*4920*
7250	*5020*

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

29) LKAS 1 இன்படி 31.3.2023 இல் முடிவடைந்த வருடத்திற்கு இனம்காணப்பட்ட இலாபம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானம் யாது?

இலாபம் 000	ஏனையமுற்றுமடங்கிய வருமானம் 000
1. 1080	200
2. 1080	250
3. 1080	150
4. 780	(150)
5. 780	150

30) LKAS 1 இன்படி 31.3.2023 இல் முடிவடைந்த வருடத்திற்கு நிறுத்திவைத்தலாபம் மற்றும் மொத்தமுற்றுமடங்கிய வருமானம் யாது?

நிறுத்திவைத்தலாபம் 000	மொத்த முற்றுடங்கிய வருமானம் 000
1. 630	930
2. 780	4850
3. 780	930
4. 630	150
5. 780	4850

❖ ***31-50 வரையான வினாக்களுக்கு விடை தருக.***

31) பின்வரும் கணக்குகள் பொருத்தமான நிதிக்கூற்றின் மூலத்திலும் கூறுகளிலும் பட்டியலிடுக.

உருப்படிகள்	மூலம்	கூறுகள்
A முற்பன விற்பனை கணக்கு	…..……………………..	…..……………………..
B செலுத்திய பங்குலாபக் கணக்கு	…..……………………..	…..……………………..

32) பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் கடன்பட்டோன் கட்டுப்பாட்டு கணக்கிலும், இலாபத்திலும் ஏற்படும் தேறிய தாக்கத்தை பெறுமதியுடன் தருக.

கொடுக்கல் வாங்கல்	கடன்பட்டோன் இலாபம்	கட்டுப்பாட்கணக்கு
A- கடன்பட்டோரிடம் 10% கழிவு தள்ளி ரூ 18000 பெறல்	…..……………………	…..……………………
B- கடன்பட்டோனால் உட்திரும்பல் ரூ 5000 இவை கிரயத்தில் 25% இலாபம் பெறக்கூடியதாக விற்கப்படல்.	…..……………………	…..……………………

33) பாவளன் நிறுவனத்தின் ஏடுகளில் இருந்து எடுக்கப்பட்ட மீதிகள் வருமாறு.

	31.3.2023 ரூ 000	31.3.2022 ரூ 000
சொத்து	24 000	20 000
பொறுப்பு	12 000	11 000

31.3.2023 இல் முடிவடைந்த நிதியாண்டில் பாவளன் தனது சொந்த ஆயுட்காப்புறுதிக்கு மாதாந்தம் ரூ 150 000 தொகையை நிறுவன பணத்திலிருந்து செலுத்தினார் அத்துடன் நிறுவன கடன் தனைப் பணம் மாதாந்தம் ரூ 200 000 தனது சொந்தப் பணத்திலிருந்து செலுத்தினார்.

பின்வருவனவற்றை கணிப்பிடுக.

அ) 31.3.2023 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான தேறியலாபம் யாது? ……………………………..

ஆ) 31.3.2023 இல் உள்ள நிறுத்திவைத்தலாபம் யாது? …………………………………………………

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

❖ *ரமணன் நிறுவத்தின் 31.3.2023 இல் முடிவடைந்த நிதியாண்டிற்கான கொள்வனவு விற்பனை முறையே ரூ 200,000 ரூ 360 000 ஆண்டுக்கான இருப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூ 30 000 ஆண்டுக்கான செயற்பாட்டு செலவு, பெற்ற கழிவு முறையே ரூ 48000, ரூ 6000*

❖ ***34 ஆம் 35 ஆம் வினாக்களுக்கு விடை தருக***

34) 31.3.2023 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான மொத்தலாபம், விற்பனைக் கிரயம் யாது?

அ) மொத்தலாபம் ……………………………………………………………………………

ஆ) தேறிறயலாபம் ……………………………………………………………………………

35) 31.3.2023 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான மொத்த வருமானம், மொத்தச் செலவு யாது?

அ) மொத்த வருமானம் ……………………………………………………………………………

ஆ) மொத்தச் செலவு ……………………………………………………………………………

36) அ) வரலாற்று கிரய எண்ணக்கருவுக்கு முரனாக அமையும் கணக்கீட்டு தகவல்களின் பண்பு எது?

……………………………………………………………………………………………

ஆ) வரலாற்று கிரய எண்ணக்கரு மீறப்படும் சந்தர்ப்பங்கள் 2 தருக.

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

37) சில்லறைவியாபாரியான செவ்வந்தி தனது கட்டுநிதியை ஒவ்வொரு மாத தொடக்கத்திலும் மீள்நிரப்புவது வழக்கம். ஏவ்வொரு மாதமும் கட்டுநிதி தொகை ரூ 300 ஆல் கூட்டி மீள்நிரப்பப்படுகின்றது. 2023 ஜனவரி, பெப்ரவரி மாத இறுதி சில்லறைக் காசு மீதி முறையே ரூ 520, ரூ 650 ஆகும் பெப்ரவரி மாத சில்லறைச் செலவினங்களின் மொத்தம் ரூ 1650 ஆகும்.

அ) 2023 பெப்ரவரி தொடக்கத்தில் கட்டுநிதியன் மீள்நிரப்பல் தொகை யாது?

……………………………………………………………………………………………

ஆ) 2022 ஜனவரி மாத சில்லறைச் மொத்த சில்லறைச் செலவினம் யாது?

……………………………………………………………………………………………

38) நந்தி நிறுவனத்தில் 31.3.20023 இல் ஏற்பட்ட தீவிபத்தில் இத்தினத்தில் உள்ள பண்டங்கள் முழுமையாக தீயினால் அழிவடைந்தது இன் நிறுவனத்தின் 31.3.2023 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான மொத்த செயற்பாட்டு செலவுகள் ரூ 42000 , ஏனைய வருமானம் ரூ 6000 , ஆண்டுக்கான தேறியலாபம் ரூ 58000 கொள்வனவு 224000 விற்பனை 293000 உட்திரும்பல் ரூ 3000 வெளித்திரும்பல் ரூ 4000 1.4.2022 இருப்பு ரூ 66000 நிதிச் செலவுகள் எவையுமில்லை. தீயழிவில் 80% காப்புறுதிக் கம்பனி நட்டஈடாக தரமுன்வந்தது.

அ) அழிவடைந்த இருப்பின் கிரயமும்?

……………………………………………………………………………………………

ஆ) இருப்பு அழிவு நட்டம் யாது?

……………………………………………………………………………………………

39) கம்சன் நிறுவனத்தின் 23/22, 21/222 காலப்பகதிகளக்கான தகவல்கள் வருமாறு,

	23/22,	**22/21**
அறவிடமுடியாக்கடன்	8000	6000
31.3 இல் கடன்பட்டோர்	54000	40000

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

21/20 நிதியாண்டில் பதிவளிக்கப்பட்ட அறவிடமுடியாக்கடனில் ரூ 2500 22/23 இல் மீளப் பெறப்பட்டது. ஓவ்வொருவருட இறுதிக்கடன்பட்டோரிலும் 10% ஐயக்கடன் ஒதுக்கீடு மேற்கொள்ளப்படுகின்றது. 22/23 வருமானக்கூற்றில் காட்டப்படவேண்டிய அறவிடமுடியாஐயக்கடன் தொகை யாது?

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

40) சக்கி விளையாட்டுக்கழகத்தின் 1.4.2022 இல் சொத்து ரூ 328000 பொறுப்பு ரூ 188000 1.4.2022 இல் உள்ள விளையாட்டு உபகரண நிதி ரூ 100 000 31.3.2023 முடிவடைந் நிதியாண்டில் இவ்வாண்டில் விளையாட்டு உபகரண நிதியின் 3⁚.5 பகுதியை பயன்படுத்தி விளையாட்டு உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டது. பயன்படுத்திய விளையாட்டு உபகரண நிதியை அவ்வாண்டு வருமானமாக கருதுவது கழகத்தின் கொள்கையாகும். 31.3.2023 இல் உள்ள மொத்த உரிமையாண்மை 220 000 ஆகும். ஆண்டில் விளையாட்டு உபகரண நிதி எதுவும் பெறப்படவில்லை.

அ) 31.3.2023 இல் உள்ளவாறான திரண்ட நிதி யாது?

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

ஆ) 31.3.2023 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான மிகை / பற்றாக்குறை யாது?

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

41) பங்குடமை தொடர் பின்வரும் கூற்றுக்கள் சரியா? பிழையா? கூறுக.

கூற்றுக்கள்	சரி / பிழை
A. பங்காளர் தமது இலாபங்களை பற்றுக்கள் மூலம் எடுத்துக்கொள்ள முடியும்.	…………………………
B. பங்காளர் ஒருவர் விலகும்போது எப்போதும் பங்குடைமையின் உரிமை குறையும்.	…………………………
C. பங்காளருக்கு காசாக செலுத்திய சம்பளம் பங்குடைமையின் உரிமையை குறைக்கும்.	…………………………
D. விலகும் பங்காளருக்கு செலுத்தவேண்டிய தொகை காசாக செலுத்தப்படாதவிடத்து அத்தொகைக்கு 5% வட்டி வழங்கப்பட வேண்டும் என பங்குடைமை கட்டளைச் சட்டத்தின் 42 ஆம் பிரிவு வலியுறுத்துகின்றது.	…………………………

42) பின்வருவன எவை LKAS 8 படி பின்வருவன கொள்கைமாற்றம் , மதிப்பீட்டு மாற்றம் என கூறுக.

A. சொத்தின் பயன்தரு ஆயுட்காலத்தில் ஏற்படும் மாற்றம் …………………………

B. சொத்து கிரய மாதிரியில் இருந்து மீள்மதிப்பீட்டு மாதிரிக்கு மாற்றல். …………………………

C. இருப்ப மதிப்பீட்டு முறையில் ஏற்படும் மாற்றம் …………………………

D. எதிர்பார்க்கை நட்டங்களுக்கான படியில் ஏற்படும் மாற்றம் …………………………

❖ *வரையறுத்த காகிள்ஸ் கம்பனி வரையறுத்த மகேஸ் கம்பனியிடம் ரூ 420000 கொள்விலையில் பொறியொன்றை குத்தகை அடிப்படையில் 1.4.2022 இல் கொள்வனவு செய்தது. இதன் வருடாந்த நிலையான தவணைக்கட்டனம் ரூ 80000 குத்தகைக்காலம் 5 வருடம், ஆயுட்காலம் 6 வருடம் குத்தகை கால முடிவில் சொத்தின் உரிமை கைமாற்றப்பட மாட்டாது. ஆரம்ப வைப்பு ரூ 100000 குத்தகை வட்டிவீதம் 20%.*

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

❖ ***43 ஆம் 44 ஆம் வினாக்களுக்கு விடை தருக.***

43) 31.3.2023 இல் நிதிநிலைமைக்கூற்றில் காட்டப்படவேண்டிய குத்தகைப்பொறுப்பு மீதிகள்

அ) நடைமுறைப் பொறுப்பு ……………………………………………………………………

ஆ) நடைமுறையல்லாப் பொறுப்பு ……………………………………………………………………

44) குத்தகை நடவடிக்கையால் 31.3.2023 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும்
காரணிகளை தனித்தியே காட்டுக.

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

45) அ) கணக்கீட்டுச் சட்டகத்தின்படி நிதிக்கூற்றின் மூலங்களை அளவீடு செய்யும் பிரதான முறைகள் 2 தருக.

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

ஆ) LKAS *8 படி கணக்கீட்டு கொள்கை மாற்றப்படும் சந்தர்ப்பங்கள் 2 தருக?*

……………………………………………………………………………………………………...

……………………………………………………………………………………………………...

46) SLFRS 15 இற்கமைய ஒப்பந்தங்களுடன் தொடர்புடைய வருமானங்களை இனம் காண்பதற்கு பூர்த்தி செய்யவேண்டிய ஐந்து படிநிலைகளும் எவை?

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

❖ *சாய்ராம் கம்பனி இன் 1.4.2022 இல் கூறப்பட்ட பங்கு மூலதன மீதி ரூ 6000 000 பங்கொன்று ரூபா 20 விலையில் வழங்கப்பட்டது. நிறுத்திவைத்தலாபம் ரூ 1800 000*

31.3.2023 இல் முடிவடைந்த நிதியாண்டில் இடம்பெற்ற தகவல்கள்

01.10.2022 இல் ஒவ்வொன்றும் ரூ 25 விலையில் 100 000 பங்குகள் பொது வழங்கல் செய்யப்பட்டது.

31.12.2022 இல் காணப்பட்ட ஒவ்வொரு ஐந்து பங்குக்கு ஒரு பங்கு என்ற அடிப்படையில் ஒவ்வொன்றும் ரூ 15 விலையில் நிறுத்தி வைத்தலாபத்தை பயன்படுத்தி மூலதனமாக்கப்பட்டது.

1.4.2022 இல் காணி முதல்தடவையாக ரூ 50000 ஆல் கூட்டி மீள்மதிப்பிடப்பட்டது.

❖ ***47 ம், 48 ம் 49ம் வினாக்களுக்கு விடை தருக.***

47) 31.3.2023 இல் காணப்படும் கூறப்பட்டபங்கு மூலதனத் தொகையும், கம்பனியின் உரிமை மூலதனமும் யாது?

அ) 31.3.2023 இல் கூறப்பட்ட பங்கு மூலதன மீதி யாது?

……………………………………………………………………………………………………...

ஆ) 31.3.2023 இல் உரிமையாண்மை யாது?

……………………………………………………………………………………………………...

48) பின்வருவனவற்றுக்கு நாட்குறிப்பு பதிவை தருக.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

அ) பொதுப்பங்கு வழங்களை மூலதனமாக்களை பதிவதற்கு

……...

……...

ஆ) நிறுத்திவைத்த இலாபத்தை மூலதனமாக்களை பதிவதற்கு.

……

……

49) அ) மேற்படி நடடிக்கையால் உரிமை மூலதனத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு யாது?

……….

……….

ஆ) பங்கு வழங்கல் நடவடிக்கையால் காசில் ஏற்பட்ட அதிகரிப்பு யாது?

……….

……….

50) பின்வரும் கூற்றுக்கள் சரியா பிழையா என குறிப்பிடுக.

A - மொத்த வருமானத்திற்கும் மொத்தச் செலவிற்கும் இடையிலான வேறுபாடு காலத்திற்கான மொத்த முற்றுமடங்கிய வருமானமாகும். (……………)

B - காலத்திற்கான இலாபத்தைவிட எப்போதும் மொத்தமுற்றுமடங்கிய வருமானம் உயர்வாக காணப்படும். (……………)

C - செலுத்திய பங்குலாபம் கம்பனியின் ஆண்டுக்கான செலவினமாகாது. (……………)

D - சொத்துக்களின் மறுமதிப்பீட்டு குறைவு எப்போது கம்பனியன் மொத்த முறறுமடங்கிய வருமானத்தை குறைக்கும். (……………)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
நான்காம் தவணைப் பரீட்சை - 2023
National Field Work Centre, Thondaimanaru.
4th Term Examination - 2023

NFWC

கணக்கீடு
Accounting

Three Hours

Gr -13 (2023)

33 | T | II

பகுதி II

01) வரையறுத்த டயானா கம்பனியின் புத்தகங்களில் 31/3/2023 31 இல் உள்ளவாறான பரீட்சை மீதி வருமாறு.

விபரம்	வரவு ரூபா 000	செலவு (ரூ 000)
@ ரூபா 20 விலையான கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம்		4000
பொதுஒதுக்கம்		1500
விற்பனை		8500
நிர்வாகச்செலவு	520	
விற்பனைக்கிரயம்	3800	
விநியோகச் செலவு	380	
ஏனைய செலவு	50	
வியாபார வருமதி வியாபார சென்மதி	530	470
வியாபார வருமதிகளின் எதிர்பார்க்கை நட்டங்களுக்கான படி ஒதுக்கம்		40
காணி	2000	
கட்டிடமும் 14.2022 இல் திரண்ட பெறுமான தேய்வும்	2200	960
மோட்டார்வாகனமும் 1.4.2022 இல் திரண்ட பெறுமான தேய்வும்	920	380
செலுத்திய வருமானவரி	620	
21/22 வரி ஏற்பாடு		440
காணி மீள்மதிப்பீட்டு மிகை		500
பெற்றவாடகை		120
1/4/2022 இல் இலாபநட்டக் கணக்கு மீதி		1200
குத்தகைப் பொறுப்பு	900	
31/3/2023 இல் இருப்பு	880	
8% வங்கி கடன்		500
வங்கிக்கடன் கடன் வட்டி	30	
காசும் காசுக்கு சமனானவையும்	5780	
	18610	**18610**

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

மேலதிக தகவல்கள் :

1) 31/3/2023 இல் இருப்பு பின்வரும் மூன்று உருப்படிகளை கொண்டுள்ளது அவற்றின் கிரயமும் தேறிய தேறத்தக்க பெறுமதியும் வருமாறு.

உருப்படி	கிரயம் (ரூ 000)	தேறிய தேறத்தக்க பெறுமதி (ரூ 000)
P	450	420
Q	250	280
R	200	180
	900	880

இருப்புக்கள் உருப்படி ரீதியாக கணிக்கப்பட்டு கணக்கீடு செய்வது கம்பனியின் கொள்கையாகும். எனினும் 31.3.2023 இருப்பு கணிப்பீடானது கம்பனியின் கொள்கைக்கு மாறாக இருப்பின் மொத்தக் கிரயம் விற்பனை கிரய கணிப்பீட்டிற்கும் அதன் மொத்த தேறிய தேறத்தக்க பெறுமதி இருப்பு கணக்கிற்கும் வரவிடப்பட்டு வேறுபாடு ஏனைய செலவிற்குள் உள்ளடக்கப்பட்டது.

2) 31.3.2023 இல் தீர்க்கப்படாத, முற்பன செலவினங்கள் வருமாறு.

	தீர்க்கப்படாத செலவு (ரூ 000)	முற்பன செலவு (ரூ 000)
நிர்வாகச் செலவு	40	30
விநியோகச் செலவு	30	10

3) கடன்பட்டோரில் மேலும் ரூபா 30 000 வருமதிகளின் மதிப்பு குறைவு நட்டமாக பதிவளிப்பதுடன் எஞ்சிய கடன்பட்டோரில் வியாபார வருமதிகளின் எதிர்பார்க்கை நட்டங்களுக்கான படி ஒதுக்கம் 10% சமனாக சீராக்குக.

4) நிர்வாகச் செலவகள் பின்வருவனவற்றை கொண்டுள்ளது.

	ரூபா 000
இயக்கணர் ஊதியம்	160
கணக்காய்வுக்கட்டனம்	240
ஏனைய நிர்வாகச் செலவு	120

5) நிலையான சொத்துக்களுக்கு பின்வருமாறு தேய்விடுக

கட்டிடம் 5% மோட்டார் 10%

6) 01.04.2022 காணியின் பெறுமதி ரூபா 1500,000 ஆகவும். கட்டிடம் 1600,000 ஆகவும் மீள விலைமதிப்பிடப்பட்டது. காணி இரண்டாம் தடவையாகவும், கட்டிடம் முதலாம் தடவையாகவும் மீளவிலையிடப்பட்டது. மீள்மதிப்பீடு தொடர்பான பதிவுகள் எவையும் இடம்பெறவில்லை.

7) 30/6/2019 இல் ரூபா 400,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் 31/12/2022 இல் ரூ 280,000 இற்கு விற்கப்பட்டது. விற்பனை மூலம் பெறப்பட்ட காசு காசுக் கட்டுப்பாட்டு கணக்கில் வரவிலும் மோட்டார் கணக்கிற்கு செலவிலும் பதிவிடப்பட்டதை தவிர வேறுபதிகள் இடம்பெறவில்லை.

8) 21/22 ஆம் நிதி வருடத்திற்காக ரூபா 500,000 வரி இணங்கிக் கொள்ளப்பட்டு முழுவதும் செலுத்தப்பட்டதுடன் 22/23 நிதி வருடத்திற்காக ரூபா 420,000 வருமானவரி மதிப்பிடப்பட்டது.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

9) பொது ஒதுக்கீட்டிற்கு ரூபா 800,000 ஐ மாற்றுக. வருட இறுதியில் பங்கொண்றிற்கு ரூ 1 பங்கலாபமாக முன்மொழியப்பட்டது.

10) கம்பனியானது 01.04.2022 இல் குத்தகை உடன்படிக்கையின் கீழ் பொறியொன்றை சொத்துப் பாவனை உரிமையை பெற்றுக்கொண்டது. இது தொடர்பான விபரம் வருமாறு.

சொத்துப் பயன்படுத்தல் உரிமையின் ஆரம்ப கிரயம் (ரூபா 000)	2000
குத்தகையின் ஆரம்ப பொறுப்பு (ரூபா 000)	1600
குத்தகை காலம்	5 வருடம்
பயனுள்ள ஆயுட்காலம்	8 வருடம்
வருடாந்த நிலையான தவனைக் கட்டனம் (ரூபா 000)	500
31.03.2023 முடிவடைந்த நிதியாண்டுக்கான குத்தகை வட்டி (ரூபா 000)	150
31.3.2024 முடிவடைந்த நிதியாண்டுக்கான குத்தகை வட்டி (ரூபா 000)	120

குத்தகை காலமுடிவில் அதன் உரிமையின் உடமையானது குத்தகை எடுத்தவனுக்கு கைமாற்றப்படாது. குத்தகை தவனைக் கொடுப்பனவு 31.3.2023 இல் செலுத்தப்பட்டது. குத்தகைக்கான ஆரம்ப கொடுப்பனவும் இவ்வாண்டுக்கு செலுத்தப்பட்ட தவனைக்கட்டனமும் குத்தகை பொறுப்பில் கணக்கில் பதியப்பட்டுள்ளது. இது தவிர வேறு பதிவுகள் இடம்பெறவில்லை.

வேண்டப்படுவது,

1) 31/3/2023 இல் முடிவுற்ற ஆண்டுக்கான இலபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக் கூற்று.
2) 31/3/2023 இல் முடிவுற்ற ஆண்டுக்கான உரிமை அசைவுக் கூற்று.
3) 31/3/2023 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று. (40 புள்ளிகள்)

02) தனி வியாபாரியான சேரலாதன் நிறுவனத்தின் 2023 மார்ச 01 இல் உள்ள மீதிகள் வருமாறு.

	ரூபா 000
ஆதனம் பொறி உபகரணம்	4000
இருப்பு	1200
வியாபார வருமதி	1800
வியாபார சென்மதி	1200
விற்பனைக்காக பெறப்பட்ட முற்பனம்	200
கொள்வனவுக்காக செலுத்தப்பட்ட முற்கொடுப்பனவு	100
காசுக்கட்டுப்பாட்டு கணக்கு	800
6% வங்கிக் கடன்	200
உரிமையாண்மை	?

2023 மார்ச் மாதத்திற்கான தகவல்கள் :

3.3 ரூ 500 000 பட்டியல் விலையான பண்டங்கள் 20% வியாபாரக்கழிவில் சேரலாதன் தனது சொத்தப் பணத்திலிருந்து கொள்வனவு செய்தார்.

5.3 சேரலாதன் ரூ 40,000 கிரயமான பண்டங்களை பற்றினார்.

7.3 ரூ 400,000 கிரயமான பண்டங்கள் ரூ 600,000 விற்கப்பட்டது. இதற்கு ரூ 200,000 சென்றமாதம் பெறப்பட்டது. மிகுதி விற்பனையின்போது பெறப்பட்டது.

10.3 ரூ 300,000 கிரயமான பண்டங்கள் கொள்வனவு செய்யப்பட்டது. இதற்கு ரூ 100,000 சென்றமாதம் செலுத்தப்பட்டது மிகுதி ஏப்பிரல் மாதம் செலுத்தப்படும்.

12.3 ஜனவரி மாத பதிவளிக்கப்பட்ட ரூ 50,000 தொகை இம் மாதம் கடன்பட்டோரிடம் மீளப்பெறப்பட்டது.

14.3 மார்ச் 01 இல் உள்ள கடன்பட்டோர் ½ பகுதி 10% கழிவு தள்ளி பெறப்பட்டது.

15.3 ரூ 400,000 கிரயமான பொறி 6% வங்கிக்கடன் மூலம் பெறப்பட்டது.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

18.3 ரூ 300,000 கிரயமான பண்டங்கள் ரூ 500,000 கடனுக்கு விற்கப்பட்டது.

20.3 கடன்பட்டோனால் திருப்பியது ரூ 50,000 (18.3 இல் விற்கப்பட்டது)

22.3 மார்ச் மாதத்திற்கு கிடைக்கப்பட்ட மின்சாரப்பட்டியல் ரூ 20,000

25.3 ஆரம்ப கடன் கொடுநர் மீதியில் ½ 20% கழிவு தள்ளி செலுத்தப்பட்டது.

28.3 கடன்கொடுநருக்கு திருப்பியது ரூ 40,000.

30.3 ரூ 200,000 பொறி காசுக்கு கொள்வனவு செய்யப்பட்டதுடன் இதே தினம் ரூ 50,000 செலவில் நிர்மானிக்கப்பட்டது.

31.3 ஆதனம்பொறி உபகரணத்திற்கு ஆண்டுக்கு 12% தேய்விடுக.

31.3 வங்கிக் கடனுக்குரிய இம்மாத வட்டி 31.3 இல் சென்மதியாகவுள்ளது.

வேண்டப்படுவது,

1) முதல் 15 கொடுக்கல் வாங்களையும் (3.3 – 31.3 வரை) கீழ்வரும் சமன்பாட்டில் பதிவு செயது காட்டுக.

ஆதனம் பொறி + இருப்பு + வி.வருமதி + முற்கொடுப்பனவு + காசு = உரிமை + வங்கிக்கடன் + வி.சென்மதி + முற்பன பெறுவனவு + ஏனைய சென்மதி .

2) 2023 மார்ச் மாதத்திற்கான வருமானக்கூற்று. (40 புள்ளிகள்)

03) அ) அன்ரனி, சாள்ஸ் என்போர் ஆலோசனை சேவை வழங்கும் பங்குடைமையோன்றின் பங்காளர்கள் ஆவர். இவர்களுக்கிடையிலான இலாபநட்ட வீதம் 3:2 பாலா என்பவர் 1.4.2022 இல் புதிய பங்காளராக சேர்க்கப்பட்டார்.

புதிய பங்குடைமை உடனபடிக்கைக்கு அன்ரனி, சாள்ஸ், பாலா ஆகியோருக்கிடையிலான இலாபநட்ட வீதம் 5:3:2 பங்காளர் மூலதனத்தற்கு ஆண்டுக்கு 10 % வட்டி வழங்கப்படுவதுடன். சாள்ஸ் க்கும் பாலாவுக்கும் 1.1.2023 இல் இருந்து மாதாந்தம் முறையே ரூ 40,000, 50,000 சம்பளம் வழங்கப்படும். பங்காளர் கடனுக்கு ஆண்டுக்கு 12% வட்டி வழங்கப்படும்.

பாலா சேரும்போது நிறுவன நன்மதிப்பு ரூ 2000,000 நன்மதிப்பு தொடர்பான சீராக்கத்தை பங்காளர் மூலதனக் கணக்கில் சீராக்கப்படும். பாலா சேரும்போது ரூ 2000,000 காசையும், 4000,000 பெறுமதியான மோட்டார் வாகனத்தையும் மூலதனமாக புகுத்தினார். இம் மோட்டார் வாகனத்தின் பயன்பாட்டு ஆயுட்காலம் ரூ 8 வருடங்கள் ஆகும்.

01.04.2022 இல் காணப்படும் மீதிகள் வருமாறு,

	மூலதன கணக்கு ரூபா 000	**நடைமுறைக் கணக்கு ரூபா 000**	**கடன் கணக்கு ரூபா 000**
அன்ரனி	8000	500	-
சாள்ஸ்	7000	300	2000

மேலதிக தகவல்கள் :

1) 31.3.2023 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான ஆலோசனைச் சேவை வருமானம் ரூ 4800 000, ஆசோசனைச் சேவை செலவுகள் ரூ 2100,000
2) 31.3.2023 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான எனைய செயற்பாட்டுச் செலவு ரூ 1880,000 (பெறுமானத்தேய்வு உட்பட)
3) 31.3.2023 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான ஏனைய வருமானம் ரூ 200,000
4) 31.12.2022 இல் சாள்ஸ் இன் கடனில் ½ பகுதியும் அத்திகதி வரையான வட்டியும் செலுத்தப்பட்டது. இது தவறுதலாக ஏனைய செயற்பாட்டு செலவில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
5) அன்ரனியின் மனைவிக்கு வழங்கப்பட்ட ஆலோசனை சேவை வருமானம் ரூ 100,000 ஏனைய வருமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

   பாலாவின் தனிப்பட்ட ஆயுள் காப்புறுதிக்கு பங்குடைமையால் செலுத்தப்பட்ட ரூ 200,000 ஆலோசனச் சேவைச் செலவாக பதியப்பட்டது.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

6) பெறுமானத்தேய்வு கணிப்பீட்டின் போது பாலா கொண்டுவரப்பட்ட மோட்டர் வாகனத்திற்கான தேய்வு கணிப்பீட்டில் சேர்க்கப்படவில்லை.

7) சாள்ஸ்க்கும் , பாலாவுக்கும் ஆண்டில் செலுத்தப்பட்ட சம்பளம் முறையே ரூ 100,000, ரூ 120,000 இவை ஏனைய செயற்பாட்டு செலவில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது:

1) 31.3.2023 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான பங்குடைமையின் வருமாகூற்றும் பகிர் கணக்கும்
2) 31.3.2023 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான பங்காளர் மூலதன கணக்கும், பங்காளர் நடைமுறைக் கணக்கும். (25 புள்ளிகள்)

ஆ) பாடுமீன் விளையாட்டுக்கழமானது 40 அங்கத்தவர்களுடன் 1.4.2021 இல் உருவாக்கப்பட்டது. அங்கத்தவர் ஒருவருக்கான ஆண்டுச் சந்தா ரூ 1000.

<u>2022.3.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான தகவல்கள்</u>

1) 01.04.2021 இல் மேலும் 50 புதிய அங்கத்தவர்கள் சேர்க்கப்பட்டனர். இவர்களில் 10 பேர் தமது இவ்வாண்டு சந்தாவுடன் 22/23 இற்கான முழு ஆண்டுச் சந்தாவையும் செலுத்தியதுடன் மேலும் 5 பேர் தமது 21/22 இற்குரிய ½ ஆண்டு சந்தாவை செலுத்தவில்லை. எஞ்சியோர் முறைப்படி சந்தா செலுத்தினர்.

<u>2023.3.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான தகவல்கள்</u>

2) 01.04.2022 இல் மேலும் 20 புதிய அங்கத்தவர்கள் இணைந்து கொண்டனர். இவர்கள் அனைவரும் தமது இவ்வாண்டுச் சந்தாவையும் அடுத்தாண்டு சந்தாவையும் செலுத்தினர்.

3) 01.04.2021 புதிதாக சேர்க்கப்பட்டவர்களில் 10 பேர் 01.04.2022 இல் கழகத்தைவிட்டு விலகினர். இவர்களில் 5 பேர் 21/22 நிலுவைச் சந்தாவை செலுத்தாதவர் உட்பட இது அறவிட முடியா சந்தாவாக பதிவளிக்கப்பட்டது. 01.04.2021 இல் சேர்க்கப்பட்ட மேலும் 8 பேர் இவ்வாண்டுக்குரிய முழுச் சந்தாவையும் செலுத்தவில்லை. எஞ்சியோர் முறைப்படி சந்தா செலுத்தினர்.

வேண்டப்படுவது :

1) 31.3.2022 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான சந்தாக் கணக்கு
2) 31.3.2023 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான சந்தாக் கணக்கு (15 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)

04) அ) வரையறுத்த துவாரகா கம்பனி VAT க்கு பதியப்பட்ட கம்பனி இக் கம்பனி பொருட்களை தனியே காசுக்கு மட்டும் கொள்வனவு செய்யப்பட்டதுடன் விற்பனை காசுக்கும், கடனுக்கும் விற்பனை செய்யப்பட்டது. 31.03.2023 இல் முடிவடைந்த மாதத்திற்கான கடன்பட்டோர், பேரேட்டிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவை.

01.03.2023 இல் இலுள்ளபடி கடன்பட்டோர் பேரேடு (000)

விபரம்	தீபன்	திலீபன்	பதுமன்	மொத்தம்
ஆரம்பமீதி	800	600	400	1800
விற்பனை (10% Vat உட்)	1320	1100	880	3300
காசு.பெறுவனவு	?	?	?	?
அனுமதித்த கழிவு	?	?	?	?
31.3.2023 மீதி	**?**	**?**	**?**	**?**

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

- *1.3.2023 இல் உள்ளவாறான கடன்பட்டோர் பேரேட்டுப்பட்டியலின் மொத்தம் கட்டுப்பாட்டு கணக்கு மீதியுடன் இணங்கியது.*
- *01.03.2023 இல் காசு மீதி ரூ 2400 000,* VAT *சென்மதி ரூ 150 000 பின்வரும் மேலதிக காசுக்கொடுக்கல் வாங்கல் 2023 மார்ச் மாதத்தில் இடம்பெற்றன.*
- *1.3.2022 இல் உள்ள கடன்பட்டோர் மீதி முழுவதும் பெறப்பட்டதுடன் அத்தினத்திலுள்ள சென்மதி* Vat *கொடுத்து தீர்க்கப்பட்டது.*

காசு விற்பனை ரூ 4400 000 (10% VAT *உட்பட)*

காசுக்கொள்வனவு 2200 000 (10% VAT *உட்பட)*

இம் மாத விற்பனை தொடர்பில் 10 நாட்களுக்குள் முழுப்பணமுப்பணம் செலுத்தும் கடன்பட்டோருக்கு VAT *நீங்களான தொகையில் 10% கழிவு அனுமதிக்கப்படும். இதன்படி தீபனும் திலீபனும் முழுத்தொகையையும் 10 நாட்களுக்குள் செலுத்தினர் எனினும் பதுமன் 400,000 மட்டும் செலுத்தினார்.*

இம்மாத செயற்பாட்டுச் செலவுக்கு செலுத்தியது ரூ 1200 000

இம்மாதத்திற்கான வங்கிக் கடன் பெற்றது 2000 000

பொறிக்கொள்வனவு (10% VAT *உட்பட) 2200 000*

வேண்டப்படுவது :

31.3.2023 இல் முடிவடைந்த மாத்திற்கான பின்வரும் மூலப்பதிவேடுகள்

1) விற்பனை நாளேடு
2) காசுப் பெறுவனவு நாளேடு
3) காசுக் கொடுப்பனவு நாளேடு

31.3.2023 இல் முடிவடைந்த மாதத்திற்கான பின்வரும் கணக்குகள்

1) காசுக் கட்டுப்பாட்டு கணக்கு
2) பெறுமதி சேர் வரி கணக்கு
3) கடன்பட்டோன் கட்டுப்பாட்டு கணக்கு
4) விற்பனைக் கணக்கு *(25 புள்ளிகள்)*

ஆ) வரையறுத்த சியாட்டோ கம்பனியின் 01.04.2022 உள்ள மீதிகள் வருமாறு

ஒவ்வொன்றும் ரூ 12 விலையான கூறப்பட்ட பங்கு மூலதனம்	ரூ 720 000
பொது ஒதுக்கம்	ரூ 100 000
நிறுத்திவைத்தலாபம்	ரூ 350 000
காணி மறுமதிப்பீட்டு மிகை	ரூ 150 000

31.3.2023 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான தகவல்கள் வருமாறு,

A. *25.5.2022 ஒவ்வொன்றும் ரூ 12 விலையான 40 000 பங்குகள் பொதுமக்களுக்கு வழங்கத் தீர்மானித்தது. இதன்போது ரூ 50 000 பங்குகளுக்கு பணம்பெறப்பட்டது இவை 5:4 என்ற விகிதாசாரத்தில் பகிரப்பட்டு மேலதிக பங்குகள் நிராகரிக்கப்பட்டு எஞ்சிய பங்குகள் மூலதனமாக்கப்பட்டது.*

B. *30.9.2022 இல் இத்தினத்திலுள்ள ஒவ்வொரு ஐந்து பங்கிற்கு ஒரு பங்கு என்ற அடிப்படையில் ஒவ்வொன்றும் ரூ 12 விலையில் உரித்து வழங்கல் மேற்கொள்ளப்பட்டது அனைவரும் உரித்து வழங்கலை ஏற்றுக்கொண்டு பணத்தை செலுத்தினர்.*

C. *31.1.2023 இல் இத்தினத்திலுள்ள ஒவ்வொரு 10 பங்கிற்கு ஒரு பங்கு என்ற அடிப்படையில் ஒவ்வொன்றும் ரூ 10 விலையில் நிறுத்திவைத்த லாபத்தை பன்படுத்தி மூலதனமாக்கலை மேற்கொண்டது.*

D. *25.2.2023 இல் காணி ரூ 200,000 ஆல் குறைத்து மீள்மதிப்பிடப்பட்டது.*

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

E. பொது ஒதுக்கத்திற்கு ரூ 50,000 மாற்றப்பட்டதுடன், செலுத்தப்பட்ட இடைக்காலப் பங்குலாபம் ரூ 40,000.

F. 31.3.2023 இல் முடிவடைந்த காலத்திற்கான மொத்த முற்றுமடங்கிய வருமானம் ரூ 750,000.

வேண்டப்படுவது :

1. 31.3.2023 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான உரிமையாண்மை மாற்றல் கூற்று
2. கொடுக்கல் வாங்கல C யை பதிவதற்கான நாட்குறிப்பு பதிவு
3. 31.3.2023 இல் உரிமை மூலதனத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு. (15 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)

05) ஆ) வரையறுக்கப்பட்ட றக்கேற் கம்பனியின் 31.3.2023 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான கடன்பட்டோன் கட்டுப்பாட்டுக் கணக்கு வரவு 68000 ஆகவும் பட்டியலமீதி 73900 ஆகும். காரணங்கள் வருமாறு.

1) விற்பனைத் திரும்பல் நாளேடு ரூ 2000 ஆல் கூட்டிக் கூட்டப்பட்டது.
2) கொடுத்தகழிவு ரூபா 1200 காசுக் பெறுவனவு நாளேட்டில் உள்ள கழிவு நிரல் 1000 என பதியப்பட்டது.
3) விதித்த வட்டி 1300 கடன்பட்டோன் பேரேட்டில் 3100 என பதிவிடப்பட்டது.
4) எதிர்மாற்றல் 3200 கட்டுப்பாட்டுக்கணக்கில் 2300 என பதியப்பட்டது.
5) காசுவிற்பனை 5000 கடன்பட்டோரிடமிருந்து பெறப்பட்ட காசாக கருதி கடன்பட்டோன்பேரேட்டில் பதியப்பட்டது.
6) வருமதிகளின் மதிப்புக் குறைவு நட்டம் 2000 அக் கடன்பட்டோன் கணக்கில் வரவிடப்பட்டது
7) மறுக்கப்பட்ட காசோலை ரூ 4000 கணக்கேடுகளில் பதிவிடப்படவில்லை.
8) கடன்பட்டோன் பேரேட்டில் காணப்பட்ட செலவு மீதி ரூ 2000 பட்டியலினுள் வரவு மீதியாக நிரற்படுத்தப்பட்டது.

வேண்டப்படுவது:

1) திருத்தப்பட்ட கடன்பட்டோன் கட்டுப்பாட்டுக் கணக்கு
2) திருத்தப்பட்ட கடன்பட்டேன் கட்டுப்பாட்டுக்கணக்கு மீதியை கடன்கட்டோன் பேரேட்டுப்பட்டியல் மீதியுடன் கணக்கிணக்கம் செய்யும் கூற்று. (20 புள்ளிகள்)

ஆ) செவ்வந்தி நிறுவனத்தினால் 2023 மார்ச் மாதத்திற்கு கிடைக்கப்பெற்ற வங்கிக் கூற்று வருமாறு

திகதி	விபரம்	கா.சோ. இல	வரவு	செலவு	மீதி
1.3	மீதி				64000
3.3	வைப்பு	SQ 4925		6000	70000
5.3	காசோலை	4424	5000		65000
9.3	காசோலை	4427	3000		62000
13.3	வைப்பு	TP 3258		8000	70000
21.3	வைப்பு	TZ 3987		12000	82000
24.3	காசோலை	4425	6000		76000
27.3	நிலையியற்கட்டளை வாடகை		4000		72000
29.3	மறுக்கப்பட்ட காசோலை	TP 3258	9000		63000
30.3	வங்கிக்கட்னம்		2000		61000
31.3	வைப்பு	DD 2598		5000	66000

மேலதிக தகவல்கள்

1) 2023 பெப்ரவரி மாத மாற்றப்படாத காசோலை விபரம்
காசோலை இல 4424 ரூ 5000
காசோலை இல 4423 ரூ 3000

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

3) 202 பெப்ரவரி மாத வசூழிக்கப்படாத காசோலை
   காசோலை இல SQ 4925 ரூ 6000
   காசோலை இல SN 3689 ரூ 10000

4) மார்ச் மாத மாற்றப்படாத காசோலை விபரம்
   காசோலை இல 4426 ரூ 12000

5) மார்ச் மாத வசூழிக்கப்படாத காசோலை
   காசோலை இல KP 8972 ரூ 20000

6) 31.5 இல் வங்கிக் கூற்றில் காணப்படும் DD 2598 காசோலை ரூ 5000 வாடிக்கையாளர் ஒருவரால் நேரடியாக வைப்புச் செய்யப்பட்டது.

7) வங்கியில் வைப்புச் செயப்பட் TP 3258 இல காசோலை வங்கியினால் ரூ 1000 மறுத்தல் செலவுடன் மறுக்கப்பட்து.

வேண்டப்படுவது :

1) மார்ச் மாத திருத்திய காசுக்கட்டுப்பாட்டு கணக்கு
2) மார்ச் மாத வங்கிக் கணக்கிணங்க கூற்று (20 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)

06) உற்பத்தி முயற்சியில் ஈடுபடும் கசியோ நிறுவனத்தில் 31/3/2023 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான தகவல்கள்.

1) 31/3/2023. 1.4.2022 இலும் உள்ளவாறான தகவல்கள்.

	31/3/2023 ரூபா 000	**1/4/2022** ரூபா 000
மூலப்பொருள் இருப்பு	2400	3000
நேரில் மூலப்பொருள் இருப்பு	300	350
குறைவேலை	1450	1650
பொறி இயந்திரம் (மு.கொ.பெ)	9800	8000

31/3/2023 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான தகவல்கள்

	ரூபா 000
மூலப்பொருள் கொள்வனவு	10500
நேரில் மூலப்பொருள் கொள்வனவு	1200
மூலப்பொருள் வெளித்திருப்பம்	750 (நேரில் மூலப்பொருள் ரூ 50 000 உட்பட)
உட்சுமை கூலி	1000 (நேரில் மூலப்பொருள் 200 000 உட்பட)
உற்பத்தி முகாமையாளர் சம்பளம் (தேறியது)	900
மின்சக்தி	1150
தெழிற்சாலை காப்புறுதி	1200
நேர் கூலி (தேறியது)	1800
தொழிற்சாலை வாடகை இறை	1400
பொறிக் கொள்வனவு	2000

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

மேலதிக தகவல்கள் :

1) ஆண்டு காலத்தில் உள்ள தொழிற்சாலையில் மூலப்பொருட்களில் ரூபா 600,000 பெறுமதியானவை களவாடப்பட்டுள்ளன.
2) 31.3.2023 இல் தொழிற்சாலை காப்புறுதியில் 800 000 தீர்க்கப்படாதுள்ளதுடன், தொழிற்சாலை வாடகையில் 400 000 அடுத்தாண்டுக்குரியது.
3) இவ்வாண்டில் உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள் 5000 31.03.2023 முடிவுப்பொருள் இருப்பு 1000 அலகுகள் இவை அனைத்தும் இவ்வாண்டு உற்பத்திகள் ஆகும்
4) ஊழியர் சேமலாப நிதியத்திற்கு (EPF) ஊழியர் 10% மும் நிறுவனமும் 15% பங்களிப்பு செய்கின்றது இதற்கு ஏற்பாடு செய்க. நேர்கூலி, முகாமையாளர் சம்பளம் ஊழியரது பங்களிப்பு கழிக்கப்பட்ட பின்னர் உள்ள தொகையை குறிக்கும்

வேண்டப்படுவது :

1. உற்பத்திக் கிரயக் கூற்று
2. மூலக்கிரயம் யாது?
3. அலகுக்கான உற்பத்திக் கிரயம் யாது?
4. அலகுக் கிரயதின் 20% இலாபம் சேர்க்கப்படின் அலகொன்றின் விற்பனை விலை யாது?
5. 31.03.2022 இல் முவுப்பொருளின் பெறுமதி யாது? (25 புள்ளிகள்)

ஆ) வரையறுத்த சிங்கர் கம்பனியின் ஏடுகளில் 01.04.2022 இல் உள்ள மீதிகள் வருமாறு,

	கிரயம் (ரூ 000)	**திரண்ட பெறுமான தேய்வு (ரூ 000)**
காணி	15 000	-
கட்டிடம்	20 000	3200
மோட்டார்	12 000	4800

மேலதிக தகவல்கள்

- காணி 31.3.2023 இல் ரூ 20 000 000 ஆக கூட்டி மீள் மதிப்பிடப்பட்டதுடன் இக்காணி 31.3.2020 ஆண்டு ரூ 2400 000 ஆல் குறைத்து மீள் மதிப்பிடப்பட்டது.
- கட்டிடம் 31.3.2023 இல் முதல் தடவையாக ரூ 15 000 000 ஆக குறைத்து மீள் மதிப்பிடப்பட்டது. 1.10.2022 இல் புதிய மோட்டார் ஒன்று ரூ 20 000 000 இற்கு கொள்வனவ செய்யப்பட்டதுடன் 31.12.2019 இல் 800 000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் 30.09.2022 இல் ரூ 680 000 இற்கு விற்கப்பட்டது இது தொடர்பில் பதிவுகள் எவையும் இடம் பெறவில்லை.
- கட்டிடத்திற்கு 5% தேய்விடுக மோட்டாருக்கு ஆண்டுக்கு 10% தேய்வடப்பட்டது.

வேண்டப்படுவது :

1) 31.3.2023 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான ஆதம்பொறி அசைவுக்கூற்று
2) மோட்டார் அகற்றல் கணக்கு (15 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)